எழுதப்பட்டுள்ளன. திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பாகத் தம்பிரான் ஒருவர் திருச்செந்தூரில் இருந்து கோபுரத்திருப்பணியைப் புரிந்து வந்துள்ளார். பணி செய்யும் ஊழியருக்குத் திருநீற்றையே இத்தம்பிரான் வழங்கியதாகவும் கூறுவர். இத்தேசி மூர்த்திகள் திருவைகுண்டம் அருகேயுள்ள காந்திஸ்வரத்தில் சமாதியடைந்துள்ளார். அவரை இச்செப்பேடு குறிப்பிடுகிறது. சன்னிதானம் அருமைத்திரு விக்காய்த் திருமுகம் கட்டளையிட்டதற்கிணங்க சிவகாசி நாடார்களும் பல பட்டைகளும் மகமை வழங்க முடிவெடுத்துச் செப்பேடும் அளித்துள்ளார்கள். தலைக்கட்டு ஒன்றுக்கு 1/2 பணம் தரவேண்டும். மேற்படி பணத்தினை நாட்டாண்மைக்காரர், கணக்குப் பிள்ளைமார், முன்னின்று நிலுவை போடாமல் தலத்தார் வாங்கித் திருப்பணி செய்பவரிடம் வழங்க வேண்டும். இத்தர்மம் செய்பவர் இம்மையில் பாக்கியமும் புத்திரப்பேறும் மறுமையில் சொர்க்கமும் பெறுவர். இச்செப்பேடு வாசகம் எழுதியவர் மயிலேறும் பெருமான் ஆவார்.

வேலப்ப நாடார்

அளக நாடார்

சீன பனிக்க நாடார்

ஆதீனமாகி நாடார்

அவன நாடார்

வழுத்தகுடி நாடார்

என ஆறு பேர் ஒப்பம் இட்டுள்ளனர். தானம் தருவதற்கு ஏற்பாடு செய்த நாடார்கள் (1) அரிய புத்திர நாடார் (2) தம்பி நாடார் (3) கட்டக்குமாரன் சிவமுருக நாடார் (4) கூத்த நாடார் (5) முத்தயன் பெரியன் நாடார் (6) தாளைமுத்து நாடார் ஆகியோர் ஆவார். செப்பேட்டின் காலத்தில் 13 ஆவது குருமகானாக அம்பலவாண தேசிகர் இருந்துள்ளார்.

முடிவுரை

இங்கே குறிப்பிடப்பட்ட நான்கு செப்பேடுகள் தவிர மேலும் பல விருதுநகர் மாவட்டச் செப்பேடுகள் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளார்கள். அவைகளின் நகல்களையும் அருங்காட்சியகத்தில் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். இப்பணிக்கு என்னுடைய உதவியை எப்போதும் செய்யத் தயாராக உள்ளேன் என்பதை அன்புடன் கூறிக் கொள்கிறேன்.

துணை நூல்கள் :

1. திருவாவடுதுறை ஆதீனமும் சிவகாசி நாடார்களும், மெய்கண்டார், பிப்ரவரி 1996, பக்கம் 31.
2. சாத்தூர் செப்பேடு, மெய்கண்டார், ஜூன் 1998, பக்கம் 17.
3. சாத்தூர் நென்மேனி வடமலைபுரம் செப்பேடு, மெய்கண்டார், அக்டோபர் 1998 பக்கம் 37–42, நவம்பர் 1998 பக்கம் 17–20.
4. திருவாவடுதுறை ஆதீன வரலாறு, உண்ணாமலை பதிப்பகம், சிதம்பரம்.
5. திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள், உண்ணாமலை பதிப்பகம், சிதம்பரம்.
6. சான்றோர் குல சமுதாய வரலாற்று ஆவணங்கள், தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை – பக்கம் 11–12, தொகுப்பு நெல்லை நெடுமாறன்.
7. A.R.E. 1983 A.S.I., Mysore.

மாவட்ட அருங்காட்சியகம் வழி கல்விப் பணி

ஜா.ரா. அசோகன்,
காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், சென்னை-8.

விருதுநகர் மாவட்ட அருங்காட்சியகம் தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத் துறையின் இருபதாவது மாவட்ட அருங்காட்சியகமாக 10-3-2001 அன்று விருதுநகரில் திறக்கப்பட்டுள்ளது. மாவட்ட அருங்காட்சியகங்கள் சிறந்த கல்வி நிறுவனங்களாகவும், சுற்றுலாத் தலங்களாகவும் மாவட்டங்களில் செயல்படுகின்றன. மாவட்ட அருங்காட்சியகங்களில் காட்சியமைப்பிற்கான இடவசதி குறைவாக இருப்பினும் அவை கல்விப் பணிகளில் அதிக ஈடுபாடு காண்பித்து பலவகை கல்விப் பணிகளை நடத்துவதன் மூலம் அருங்காட்சியகப் பணி சிறப்பாக நடைபெற ஏதுவாகிறது. எவ்வாறான கல்விப் பணிகள் ஒரு மாவட்ட அருங்காட்சியகத்தால் நடத்த இயலும் என்று எண்ணத் தோன்றும். அருங்காட்சியகம் என்ற உடனேயே அதில் உள்ள காட்சிப்பொருட்களும் அதன் காட்சியமைப்புமே நம் கண்முன் தோன்றும். காட்சிப்பொருட்களைக் காட்சியில் வைப்பதால் மட்டும் ஒரு அருங்காட்சியகத்தின் பணி நிறைவு பெற்றுவிடும் என்ற கூற இயலாது. எண்ணற்ற பணிகள் பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு அருங்காட்சியகத்தால் செய்ய இயலும். இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு காண்பிக்கப்படும் மக்களின் ஆர்வம் பெருநகரங்களை விட மாவட்டங்களில் அதிகமாகக் காணப்படும். ஆகையால் மாவட்ட அருங்காட்சியகங்கள் சிறந்த கல்வி நிறுவனங்களாகச் செயல்பட ஏதுவாகின்றன.

இக்கல்விப் பணியின் முதல்கட்ட நடவடிக்கையாக அருங்காட்சியகத்தில் நமது கலை, பண்பாடு மற்றும் அறிவியல் சார்ந்த செய்திகளை விளக்கும் வகையில் காட்சிப் பொருட்களை வைத்து காட்சியமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. இக்காட்சியமைப்பை அல்லது கண்காட்சியைப் பார்வையிட சுற்றுலாக்

கண்ணோட்டத்திலோ அல்லது அறிவியல் கண்ணோட்டத்திலோ பொதுமக்களும், மாணவர்களும் வரக் கூடும்.

உதாரணத்திற்கு தற்பொழுது அமைக்கப்பட்ட விருதுநகர் அருங்காட்சியகத்தில் மாவட்ட விளக்கங்கள், தொல்பொருளியல், நாணயவியல், புவியமைப்பியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், ஓவியக்கலை, வேதியியல் பாதுகாப்பு மற்றும் இதர அறிவியல் சம்பந்தமான செய்திகள் பார்வையாளர்களைக் கவரும் வகையில் காட்சியமைப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இக்கண்காட்சியைப் பார்ப்பதன் மூலம் பார்வையாளர்களுக்கு இக் கருத்துக்கள் சம்பந்தமான செய்திகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கின்றது.

இவ்வாறு அமைக்கப்படும் கண்காட்சியை மூன்று வகைப்படுத்தலாம்.

1. நிரந்தரக் கண்காட்சி : நீண்ட காலத்திற்கு மாற்றப்படாமல் இருக்கும் வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டால் அவற்றை நிரந்தரக் கண்காட்சி என்று கூறுகிறோம். பொதுவாக பெரிய அருங்காட்சியகங்களிலேயே இக் கண்காட்சிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

2. தற்காலிகக் கண்காட்சி : அடிக்கடி மாற்றும் கண்ணோட்டத்தில் அமைக்கப்படும் கண்காட்சியைத் தற்காலிகக் கண்காட்சி என்று கூறலாம். பொதுவாக மாவட்ட அருங்காட்சியகத்தில் இவ்வகைக் கண்ணோட்டத்திலேயே கண்காட்சிகள் அமைக்கப்படுகின்றன. மாவட்ட அருங்காட்சியகங்கள் சிறிய அருங்காட்சியகங்களாக அமைக்கப்படுவதால் அடிக்கடி காட்சியமைப்பை மாற்றுவதன் மூலம் பொதுமக்கள் தொடர்ந்து அருங்காட்சியகத்தைப் பார்வையிட இது ஒரு தூண்டுகோலாக அமைகிறது.

3. கருத்துக் கண்காட்சி : ஒரு குறிப்பிட்ட கருத்தை எடுத்தியம்பும் வகையில் மாவட்ட அருங்காட்சியகங்கள் கண்காட்சியை

நடத்தலாம். இதற்கென தனியாகக் கண்காட்சிக் கூடம் இருந்தாலோ அல்லது இருக்கும் காட்சியமைப்பை மாற்றியமைத்தோ இக் கண்காட்சியை நடத்தலாம். பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் இது ஒரு பயனுள்ள காட்சியமைப்பாக இருக்கும். மாதம் ஒரு முறையோ அல்லது சில மாதங்களுக்கு ஒரு முறையோ தொடர்ந்து இவ்வாறு நடத்தினால் அருங்காட்சியகங்கள் ஒரு அறிவுக் களஞ்சியமாகச் செயல்படும். அருங்காட்சியகக் காட்சிப்பொருட்களும், அவற்றின் காட்சியமைப்பும் முதல் கல்விப் பணியாக இருப்பினும் பொதுவாகக் கல்விப் பணிகள் என்று அருங்காட்சியகத்தில் கூறுவது கீழ்வரும் கல்விப் பணிகளையே குறிக்கும்.

கல்விப்பணிகள் :

ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி மாவட்ட அருங்காட்சியகங்கள் சிறிய காட்சியமைப்பைக் கொண்டிருப்பதால் கீழ்வரும் கல்விப்பணிகளில் அதன் ஈடுபாடு அதிகமாகக் காண்பிக்கப்படுகிறது. பல்வேறு கல்விப்பணிகள் மாவட்ட அருங்காட்சியகங்களால் நடத்தப்படுகின்றன.

சொற்பொழிவுகள் :

மாதாந்திர சொற்பொழிவுகள் அருங்காட்சியகங்களில் நடத்தப்படுகின்றன. வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்படும் இச் சொற்பொழிவுகள் பெரும்பாலும் படவில்லைகளைக் கொண்டு காட்சியுரைகளாகவே நடத்தப்படுகின்றன. ஆதலால் பல்வேறு தலைப்புகளில் மாணவர்களும் பொதுமக்களும் பயனடைய வாய்ப்பேற்படுகிறது.

இச்சொற்பொழிவுகள், குறிப்பிட்ட தலைப்பில் செவிக்கும், கண்ணுக்கும் விருந்தளிக்கின்றன. கேள்விக் கணைகளை தொடுப்பதன் மூலம் சொற்பொழிவு தலைப்பு பற்றிய கருத்துக்களை மேலும் ஒருவர் விரிவாக அறிந்து கொள்ள இயலும்.

கருத்தரங்குகள் :

சிறப்பு நிகழ்ச்சியின்பொழுது நடத்தப்படும் கருத்தரங்குகள் குறிப்பிட்ட தலைப்பில் அறிவுக் களஞ்சியமாக செய்திகளைச் சேகரிக்க ஏதுவாகிறது. இவற்றைத் தொகுத்து வெளியிடப்படும் நூல்கள் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பயன்படுகின்றன.

பயிற்சி வகுப்புகள் :

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பல்வேறு வகையான பயிற்சி வகுப்புகள் மாவட்ட அருங்காட்சியகங்களால் நடத்தப்படுகின்றன; நடத்தப்பட உள்ளன. உதாரணமாக கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகளைக் கூறலாம்.

1. போலி உயிரினமாக்குதல்
2. கலைப்பொருட்களைப் பாதுகாத்தல்
3. பல்வேறு ஓவியப் பயிற்சிகள்
4. சுடுமண் பொம்மைகள் தயாரித்தல்
5. கலைகள் வளர்த்தல்
6. இயற்கையைப் பாதுகாத்தல்
7. கணிப்பொறிப் பயிற்சி
8. பல்வேறு கலைகளை அறிந்து கொள்ளும் பயிற்சி

சிறப்பு நிகழ்ச்சிகள் :

மாணவர்களுக்கு அருங்காட்சியகத்தின் மேல் ஈடுபாடு ஏற்படும் வகையில் கீழ்க்கண்ட சிறப்பு நிகழ்ச்சிகளும் மாவட்ட அருங்காட்சியகங்களால் நடத்தப்படுகின்றன.

அ. உங்கள் மாவட்டத்தை அறிந்து கொள்ளுங்கள் : மாவட்டத்தின் சுற்றுலாத்தலங்கள், சரித்திரப் புகழ்வாய்ந்த இடங்கள்,

மாவட்ட இயற்கை வளங்கள் ஆகியவற்றை மாணவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் மாணவர்களைப் பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று வல்லுநர்களைக் கொண்டு அந்த இடங்களிலேயே சொற்பொழிவு ஆற்றுதல்.

ஆ. மலை சூழ்ந்த மாவட்டங்களில் மாணவர்களை உடல், மன ஆரோக்கியத்திற்கும், இயற்கையைப் பாதுகாத்தல் மற்றும் ரசித்தல் ஆகியவைகளை உணர்த்துவதற்காகவும் இயற்கை வனங்களில் நடைப் பயணமாக கூட்டிச் செல்லுதல் மற்றும் தாவர, விலங்கின வகைகளை நடந்து செல்லும் பொழுதே விவரித்தல்.

பல்வேறு போட்டிகள் நடத்துதல் :

மாவட்ட அருங்காட்சியகங்கள் மாணவர்களுக்காக பல்வேறு போட்டிகளை நடத்தி, பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்குகின்றன. சிறப்பு நாட்களைக் கொண்டாடும் வகையிலும் இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. உதாரணமாக, கீழ்க்கண்டவற்றைக் கூறலாம் :

1. ஓவியப் போட்டி
2. பேச்சுப் போட்டி
3. எழுத்துப் போட்டி
4. கோலப் போட்டி
5. வினாடி – வினாப் போட்டி

இப்போட்டிகளை நடத்துவதன் மூலம் மாணவர்களுக்கு அருங்காட்சியகத்தின் மேல் ஈடுபாடு அதிகமாகிறது.

நூலகம் மற்றும் ஆராய்ச்சி வசதி :

ஒவ்வொரு மாவட்ட அருங்காட்சியகத்திலும் நூலக வசதி உண்டு. இந்நூல்களின் உதவி கொண்டு அருங்காட்சியகப்

பொருட்களைப் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நூலகத்தைப் பயன்படுத்த ஆர்வமாய் இருக்கும் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர்களுக்கு மாவட்ட அருங்காட்சியகங்கள் பயனளிக்கின்றன. காப்பாட்சியர்களும் ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிகளில் உதவி புரிபவர்களாக உள்ளனர்.

கல்வி நிறுவனங்களுடன் இணைந்து நடத்தும் நிகழ்ச்சிகள் :

மாவட்ட கல்வி நிறுவனங்கள் காப்பாட்சியர்களை அணுகி ஆர்வமுள்ள தலைப்புகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தும்படி கேட்கும் பொழுது இதற்கான சொற்பொழிவுகள் ஏற்படுத்தப்படுகின்றன. மேலும் ஏற்கெனவே குறிப்பிட்ட பயிற்சி வகுப்புகள், பணிப் பட்டறைகள் கல்வி நிறுவனங்களுடன் இணைந்தும் நடத்தப்படுகின்றன.

கலை மற்றும் அறிவியல் செல்வங்களைப் பாதுகாப்பது :

பொதுமக்கள் புதையலாகக் கிடைக்கப்பெறும் சிலைகள் மற்றும் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் என்ன செய்யப்பட வேண்டும், சரியான சட்டதிட்டங்கள் யாவை ஆகியவை பற்றியும், மரபுச் செல்வங்களைப் பாதுகாக்கும் முறைகள் மற்றும் இவற்றில் மாணவர்கள், பொதுமக்களின் பங்கு; பாதுகாக்கப்பட்ட உயிரினங்களின் பட்டியலை அறிந்து கொள்ளுதல் மற்றும் சட்ட நுணுக்கங்களை அறிந்து கொள்ளுதல் போன்ற பணிகளையும் மாவட்ட அருங்காட்சியகங்கள் செய்கின்றன.

வெளியீடுகள் :

காப்பாட்சியர்கள் அவ்வப்பொழுது அருங்காட்சியகம் சம்பந்தப்பட்ட கட்டுரைகளைப் பத்திரிக்கைகளிலும் இதர ஆராய்ச்சி பருவ இதழ்கள் மற்றும் நூல்களிலும் வெளியிடுகின்றனர். காப்பாட்சியர்களால் பல்வேறு தலைப்புகளில் நூல்களும் எழுதப்பட்டு

வெளியிடப்படுகின்றன. மேலும் அருங்காட்சியகத் துறையில் வெளியிடப்பட்ட நூல்கள், மாவட்ட அருங்காட்சியகங்களில் விற்பனைக்காக வைக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட இவ்வகைப் பணிகளும் இதர பணிகளும் மாவட்ட அருங்காட்சியகங்களால் நிகழ்த்தப்படுகின்றன. ஒரு மாவட்ட அருங்காட்சியகத்தில் மேற்குறிப்பிட்ட பணிகள் அனைத்தும் நடத்தப்படவில்லை என்றாலும், அனைத்தையும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இவ்வகையில் மாவட்ட அருங்காட்சியகங்கள் சிறந்த கல்வி நிறுவனங்களாகத் திகழ்கின்றன.

துணை நூல்கள்:

1. T.K. Biswas, Museum and Education, 1996.
2. Resource Material of Environmental Education Through Museums Training Course, 1993.
3. Journal of Indian Museums, April 2000.

SRIVILLIPUTTUR BRONZES IN THE COLLECTION OF VIRUDHUNAGAR MUSEUM

P. SAM SATHIARAJ,
Curator,
Government Museum, Madurai - 625 020.

Introduction

Seven beautiful treasure-trove bronzes acquired from an irrigation tank at Kansapuram village near Srivilliputtur have been added to the collection of Virudhunagar Museum. All the seven bronzes belong to Vaishnavite sect. These include a set of large standing Vishnu with consorts, two small seated Vishnus, a small standing Vishnu with *prabha* and a small Tirumangai Alvar.

This finding of seven Vaishnavite bronzes from the same place at Srivilliputtur taluk reflects the importance of this area being a reputed Vaishnavite centre since 8th Century A.D. This is evident from the present collection which is dated to 9th Century to 18th Century A.D.

Srivilliputtur is one of the 108 sacred Vaishnavite *kshethras* in India. The Andal Temple was built in 788 AD. The Hymns of Perialvar and Andal (8-9th Century AD) refer to the presiding deity of the *Vatapatrasayi* Temple. This temple was patronised and renovated by many rulers like the Early Pandyas, Cholas, Later Pandyas, Vijayanagar Kings, Bhanadhirayar, Tenkasi Pandyas, Nayaks of Madura and Later Chera Kings. Epigraphic records of the 13th Century A.D. speak of 6 Vishnu temples in Srivilliputtur and the surroundings. All these prove beyond doubt that Srivilliputtur was a renowned Vaishnavite centre since 9th Century A.D. and these bronzes might have been worshipped in any of these temples.

Description of Bronzes

1. Vishnu (9th Century A.D.)

This Vishnu bronze is 18cm in height. Vishnu is represented as seated over the *padmasana*. He is seated in *sukhasana* i.e. his right leg hangs freely and the left is folded over the *asana*. The *Kiritamakuta* or the crown of Vishnu is perfectly cylindrical with a bulbous projection. *Makarakundalas* adorn the earlobes. Thick lips, flat nose, broad torso which are characteristic to this particular period are found. The *kanthi* or the necklace is simple, the sacred thread is thick and ribbon-like. A strand from the sacred thread flows into the left hip and comes out of the left leg and flows over the *asana*. This is a very peculiar feature of this early bronze and this is very rarely met with in the Vishnu bronzes.

The upper right hand carries the *chakra* and the left carries the *sankha* or conch in a *kartarirmukha* fashion. The attributes are held in an angle of 45°. The *chakra* is in the form of *prayoga*. The lower right hand holds the lotus with a long stem and the lower left hand holds the *gada*. Both *gada* and *padma* are carried in a very natural way which is the characteristic feature of the early Vishnu icons. The *srivatsa* mark on the right chest is in the form of a semisymbolic figure of seated Lakshmi. The folds of the draperies are simple and more archaic. The *siraschakra* has 11 floral designs.

All these features tend to assign this bronze to about 8th to 9th Century A.D.

2. Vishnu (15th Century A.D.)

This bronze is 90 cm in height. Vishnu is represented as standing erect on the *padmasana* which is over the square *bhadrasana*. The *kirita* is slightly conical with a bud-shaped tip on the bulbous cushion. The nose and chin are sharp. The ears are adorned with *makarakundalas* and neck with *kanthis* (neclaces). The *skandhamala* or the shoulder tassel has two strands. The armlets and bracelets are of circular type. The *udharabandha* or the stomach band is a thick flat band. The sacred thread has 3 strands. The waist band or the *katisutra* is composed of a number of ribbon-like straps. The dress of Vishnu is in the usual *hastisaundika* fashion or the orthodox mode of wear, neatly folded and held together by the *katisutra*. The *srivatsa* symbol is like a clear triangular mark.

The upper right hand holds the *chakra* and the left carries the conch in a *kartarimukha* fashion. While the lower right is in *abhaya* mudra and the lower left hand held in the pose of resting over the *gada*. All these aspects tend to date this Vishnu bronze to about 15th Century A.D.

3. Sridevi (15th Century A.D.)

Height is 71 cm. Sridevi, the goddess of prosperity, is represented as standing on *padmasana* over the square *bhadrasana*. The head is adorned with *karandamakuta* and ear-lobes with *patrakundala*. The right hand is in *lolahasta* that is hanging freely and the left carries the lotus. The nose and chin are sharp. The flexion in the hip tends to left. *Kuchabandha* or the breast band is present. The shoulder tassel has two strips. The neck is adorned with two *kanthis*. The bracelets and armlets are of circular types. The draperies are multifolded and hang upto the ankles.

4. Bhudevi (15th Century A.D.)

Height is 71 cm. Bhudevi, the earth goddess, is represented as standing on the *padmasana* over the square *bhadrasana*. The draperies and the ornaments are similar to Sridevi except some features. The earlobes are adorned with *makarakundalas*. The right hand holds the lilly and the left in *lolahasta*. Facial features are sharp. The sacred thread flows down and goes below the hip.

The above group i.e. Vishnu with his consorts Sridevi and Bhudevi posses all the characteristic features of 15th Century A.D. The Vijayanagar style is prominent in all the above bronzes which hail from the Pandya country.

5. Vishnu (15th Century A.D.)

Vishnu, height 28 cm, is represented as seated over the rectangular *bhadrasana*. The whole Vishnu image is inclined sharply towards the backside. *Kirita* is slightly conical with a prominent bulbous projection. Ears are adomed with *makara-kundalas*. Nose and chin are not so sharp. *Srivatsa* mark is very faint. The upper hands of Vishnu carry *chakra* and *sankha are* in a *kartarirmukha* style. The lower right hand holds the *gada* upwards. This is also very peculiar character for this *asanamurti*. The lower left hand is in *varada mudra*. The sacred thread divides into three divisions clearly. *Udarabhandha* is very prominent.

Looking on the backside of this image, the *siraschakra* has 18 floral designs with a few tassels dangling from the central hub.

6. Vishnu (18th Century A.D.)

Height is 27 cm. Vishnu is standing on the *padmasana* over the *bhadrasana*. There is an ornate *prabha* surrounds this Vishnu. The representation of *prabha* is modern. Nose and chin are sharp. Style of draperies, shoulder tassels and waist band all represent modem period bronzes.

The attributes in the hands are usual and the way in which they are carried is similar to the modem bronzes. Hence this Vishnu bronze can be assigned to 17th or 18th Century A.D.

7. Thirumangai Alvar (18th Century A.D.)

Height is 12 cm. The Vaishnavite saint is represented as standing on a round metal piece with a sword held upwards in his right hand and the left hand in the pose of holding a shield. Pedastal is absent. The hair is tied into a knot at the centre. No sacred thread is seen.

Conclusion

Although all the above seven bronzes were acquired from the same place, their style and size differ much. Their period covers a wide range of time i.e. starting from the early Pandya period upto the modern period. So Government Museum, Virudhunagar is proud of possessing and preserving the prestigious art heritage of this area. This metal art reflects the cultural heritage of this area especially Srivilliputtur from where these bronzes have been acquired. It proves beyond doubt that Srivilliputhur area was a renowned Vaishnavite centre from 9th Century A.D. onwards.

Bibliography

1. Sivaramamurti (1963) 'South Indian Bronzes' New Delhi; Lalit Kala Akademi - India.

2. Srinivasan P.R. (1963) 'Bronzes of South India' Bulletin of Madras Government Museum.

3. Gopinatha Rao T.A. (1914) 'Elements of Hindu Iconography', Madras ; Motilal Banarsidass.

4. Srinivasa Desikan V.N. (1972) 'Guide to Bronze Gallery' - Government Museum, Madras.

5. Vedachalam V., Sethuraman G. and Madhuca Krishnan (c) (2000) Virudhunagar District - An Archaeological Sourcebook).

அரசு அருங்காட்சியகம், விருதுநகர் - மாவட்டத்தின் பலகணி

சே. கிருஷ்ணம்மாள்,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், இராமநாதபுரம்

மாவட்டந்தோறும் அருங்காட்சியகங்கள் என்னும் தமிழக அரசின் கொள்கைப்படி விருதுநகர் மாவட்ட அருங்காட்சியகம் 2001–ம் ஆண்டு மார்ச் 10–ம் நாள் தொடங்கப்பட்டது. இதுவரை 19 மாவட்ட அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வரிசையில் இது இருபதாவது அருங்காட்சியகம் ஆகும்.

அருங்காட்சியகங்கள் மாவட்டத்தின் கலை, பண்பாடு, அறிவியல் தொடர்பான அரும்பொருட்களை ஒரே இடத்தில் கண்டுகளிக்கும் வகையில் அமைக்கப்பட்டு அரும் பொருட்களைப் பாதுகாப்பதுடன், மக்களுக்கும் மாணவ, மாணவியர்களுக்கும் நமது பழம் பெருமையைப் புகட்டி, தொண்டாற்றி வருகின்றன. கல்விக்கும் ஆய்விற்கும் மிகவும் உதவக்கூடிய அறிய சான்றுகளைத் தன்னகத்தே கொண்டு கல்வி நிறுவனங்களாகவும் விளங்கி வருகின்றன.

விருதுநகர் மதுரையிலிருந்து கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 60 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரின் முந்தையப் பெயர் “விருதுப்பட்டி” என்பது ஆகும். “விருது” என்பது ஒருவரது தொண்டைப் பாராட்டி வழங்கும் பரிசாகும். பரிசு பெற்ற ஒருவராலோ அல்லது பலராலோ விருதுப்பட்டி என்று இந்த ஊர் பெயர் பெற்றிருக்கலாம். முதல் உலகப் போரின் போது இந்த ஊர் வணிகர்கள் ஆங்கில அரசுக்கு மிகவும் உதவியாக இருந்தனர். அதற்கு நன்றி செலுத்தும் விதத்தில் ஆங்கில அரசு விருதுநகர் என இந்த ஊர்ப் பெயரை மாற்றி அமைத்தது. 1985–ல் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான மார்ச் 15–ல் இம்மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு காமராசர் மாவட்டம் என அழைக்கப்பட்டது. 1997–லிருந்து தலைநகராகிய விருதுநகர் பெயரில் விருதுநகர் மாவட்டம் என அழைக்கப்பட்டு வருகிறது.

1915–லேயே இங்கு நகரசபை ஏற்படுத்தப்பட்டது. மாநிலத்திலேயே முதன் முதலாக சிமெண்ட் ரோடு இங்கு தான் போடப்பட்டது. இங்கு தான் எண்ணையால் இயங்கும் இயந்திரம் கொண்டு விருதுநகர் முழுவதும் மின் தெருவிளக்குகள் 1924–லிலேயே போடப்பட்டது. தமிழ்நாட்டிலேயே மிக நீளமான ரெயில் மேடையும் (பிளாட்பார்ம்), சரக்கு ஏற்றும் "மார்ஷலின் யார்டும்" அமைக்கப்பட்டுள்ளன. "சிக்கிரி" என்னும் ஒருவகை காப்பித்தூள் உரிமை இந்தியா முழுவதற்கும் இந்நகர வியாபாரிகளிடையே உள்ளது. பொதுவாக இங்கு வியாபாரம் பெரிய அளவில் நடைபெற்று வருகிறது. மேலும் எந்த மாவட்டத்திற்கும் இல்லாத பெருமை இம்மாவட்டத்திற்கு உள்ளது. அதாவது தமிழ்நாட்டு முன்னாள் முதல் அமைச்சர் மற்றும் ஒரிசா கவர்னர் ஓமந்தூர் பி. குமாரசாமி ராஜா அவர்களும் முன்னாள் முதல் அமைச்சர் பெருந்தலைவர் கு. காமராசர் அவர்களும் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே. எல்லாவற்றிற்கும் மேலாக இம்மாவட்டத்தில் உள்ள திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயிலின் கோபுரமே தமிழக அரசின் சின்னமாக விளங்கி வருகிறது. இத்தகைய பெருமைவாய்ந்த விருதுநகரில் மாவட்ட அருங்காட்சியகம் அமைந்தது சாலப் பொருத்தமாகும்.

விருதுநகர் மாவட்ட அருங்காட்சியகம் பல்நோக்கு திட்டங்களை உள்ளடக்கி பலகணியாக செயல்பட்டு வருகிறது என்றால் அது மிகையாகாது. விருதுநகர் அருங்காட்சியகம் பல பண்பாட்டுப் பொருட்களை உள்ளடக்கிய அரங்கமாகவும் கல்விப்பணியில் ஓர் பல்கலைக்கழகமாகவும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு விளக்கம் அளிக்கும் நிலையமாகவும் அரிய படிமங்கள், அரிய கல்வெட்டுகள், அரிய பழங்காசுகள், அரிய ஓலைச் சுவடிகள், அரிய கற்சிற்பங்கள் போன்ற கலைப் பண்பாட்டு செல்வங்களின் பாதுகாவலனாகவும் செயல்பட்டு வருகிறது.

கல்விப்பணியில் விருதுநகர் அருங்காட்சியகத்தின் பங்கு

விருதுநகர் மாவட்டத்தில் 10 கல்லூரிகளும், 1416 பள்ளிகளும் (தனியார் மற்றும் அரசு உட்பட) செயல்பட்டு வருகின்றன. இவற்றில்

பயிலும் பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவியர்கள், தாங்கள் பயிலும் பாடங்களான, அறிவியல், விலங்கியல், நாணயவியல், புவியியல், வரலாறு, வேதியியல், பௌதீகம், போன்றவற்றில் சில முக்கிய பொருட்களைப் படிக்கும்போது அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அரிய படிமங்கள், விலங்கியல் பொருட்கள், நாணயங்கள், ஆயுதங்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் பழம்பொருட்களைப் பற்றிய விபரங்களை நேரில் கண்டு களித்து, தெளிவாகக் கற்றுணர வாய்ப்பு கிடைக்கிறது.

மேலும், மாவட்ட அருங்காட்சியகத்தில் திங்கள் தோறும் அருஞ்சொற்பொழிவுகள் அனுபவம் வாய்ந்த அறிஞர்களைக் கொண்டு நடத்த இருப்பதால் பங்கு பெறும் மாணவ, மாணவியர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். அத்துடன் பல்வேறு வகையான பயிற்சிகள் (ஓவியம், கல்வெட்டுப் பயிற்சி, பறவைகள் மற்றும் விலங்குகள் பதப்படுத்துதல், பொருட்களை வேதியியல் முறையில் பாதுகாத்தல், சேகரித்தல்) சிறப்புக் கண்காட்சிகள் நடத்துவதன் மூலம் ஆசிரியர் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு இந்த அருங்காட்சியகம் சிறந்ததொரு கல்வி நிலையமாகத் தொண்டாற்ற உள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு அருங்காட்சியகத்தின் தொண்டு

விருதுநகர் மாவட்ட அருங்காட்சியகத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களின் விவரங்களை அருங்காட்சியக அறிமுகக் கூடத்தில் விரிவாக்கம் செய்து வைக்கப்பட்டுள்ள அரியப் புகைப்படங்களைக் கண்டுகளித்து பின்வரும் சுற்றுலாத் தலங்களின் முழு விபரங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது.

திருவில்லிப்புத்தூர் - ஆண்டாள் கோயில்

இக்கோயிலில் “திருப்பாவை” முழுவதும் எழுதப்பட்டுள்ளது. நூற்றெட்டு வைணவத்தலங்களிலும் நின்றும், இருந்தும், கிடந்தும் உற்ற கடவுளர்களின் ஓவியங்களை இந்த ஆலயத்தின் இரண்டாம்

சுற்றில் காண முடியும். இவ்வாலயத்திற்குத் திருப்பணி செய்தவர்களுள் மன்னர் திருமலை நாயக்கர் முக்கியமானவர். அக்கால கலைஞரின் கைவண்ணத்தை இங்குள்ள சிற்பங்களில் காணலாம்.

யாளிகள் உள்ள பெரிய தூண்களிலும், சிங்கம், யானை யாவும் ஒன்றன்மீது ஒன்று நிற்பது போன்ற சிற்பமும் இங்குள்ளது. தற்காலத்தில் முப்பரிமாணங்களைப் (Three Dimension) பார்ப்பதற்கு மும்பபரிமாண முழுப்படம் (Hologram) வெளிவந்துள்ள நிலையில், எவ்வித கண்ணாடியும் இல்லாமல் இக்கோயிலின் சிற்பங்களிலும் நீளம், அகலம், உயரம், ஆகிய யாவும் ஒருங்கே தெரியும்படியான அமைப்பில் உள்ளது. ஒவ்வொரு மூலையிலிருந்தும் பார்த்தால் காட்சியில் சில வேறுபாடுகளைக் காணமுடியும்.

ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஆண்டாள் கோயிலில் 70 அடி உயரத்தில் ஒன்பது சக்கரங்கள், ஒன்பது அடுக்குகள், ஒன்பது வடங்கள் கொண்ட “ராஜாதேர்” காண வேண்டிய ஒன்றாகும். இத்தேர் வானமாமலை ஜீயர் சுவாமிகளால் வழங்கப்பட்டது.

இராசபாளையம்

விருதுநகர் மாவட்டத்தில் மிகப்பெரிய ஊரான இராசபாளையம் பஞ்சாலைத் தொழில் வளர்ச்சிப் பெற்ற நகரமாகும். இவ்வூருக்கு மேற்கே 13 கி.மீ. தொலைவில் அய்யனார் அருவியும் அருகில் உள்ள சஞ்சீவி மலையும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த இடமாகும். இங்குள்ள ஒருவகை நாய்கள் உலக பிரசித்திப்பெற்றவை. இராசபாளையம் அருகே நத்தம்பட்டி கிராமத்தில் 1999–ம் ஆண்டு குடிதண்ணீர்க் குழாய் பதிக்க மண்ணைத் தோண்டிய போது 9 தங்கக்காசுகள் கண்டெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அந்நாணயத்திலுள்ள உருவ அமைப்பு, சிகை அலங்காரம், ஆடை அமைப்பு மற்றும் காலம் ஆகியவற்றை ஆராயும் போது அவை கி.மு. 4–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானியர் காலத்து நாணயங்கள் என்பது தெரியவந்தது. இதிலிருந்து ரோமானியர்க்கும் விருதுநகர்

மாவட்ட மக்களுக்கும் வாணிகத் தொடர்பு இருந்தது தெரியவருகிறது. இந்நாணயங்களைப் புதைபொருள் சட்டப்படி விருதுநகர் அருங்காட்சியகத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருச்சுழி

விருதுநகரிலிருந்து 32 கி.மீ. தூரத்தில் குண்டாறு என்னும் ஆற்றங்கரையில் அமைந்துள்ள இவ்வூர் பகவான் ரமணமகரிஷி அவதரித்த ஊர் ஆகும். சுந்தரர், தேவாரத்தால் புகழ்பெற்ற தலம் திருச்சுழி ஆகும். பச்சை மூலிகைகளால் ஆன நடராஜரின் திருஉருவம் இங்குள்ளது.

சிவகாசி

இந்நகர் 15–ம் நூற்றாண்டில் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்தியாவின் “குட்டி ஜப்பான்” என்று புகழப்பெற்ற சிறுதொழில் வளர்ச்சி பெற்ற நகராகும். 1420 முதல் 1460 வரை தென்காசியிலிருந்து ஆட்சி செய்த அரிகேசரிப் பராக்கிரம பாண்டியன் தென்காசியில் கோயில் கட்ட, லிங்கம் கொண்டுவர காசிக்குச் சென்று திரும்பிய போது இங்கு தங்கினான். கோயில் அமைக்கும் நாள் வந்து விட்ட காரணத்தினாலும், தன்தேவி இங்கு பூப்பெய்தியதாலும் அந்த லிங்கத்தை இவ்வூரிலேயே பிரதிஷ்டைசெய்து கோயில் எடுத்தான். அக்கோயிலைச் சுற்றி அமைந்த நகர் “சிவகாசி” எனப்பட்டது. இந்தியாவில் உற்பத்தியாகும் பட்டாசு உற்பத்தியில் 90 சதவீதம் இங்கு தான் உற்பத்தி செய்யப்படுகிறது. கவர்ச்சிகரமான வண்ணங்களுடன் படங்களை அச்சிடும் “லித்தோ” அச்சகங்கள் இங்கு ஏற்படுத்தப்பட்டு, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புகழ் பெற்றுள்ளன.

திருவண்ணாமலை

மேற்குத் தொடர்ச்சி மலை காட்டுப்பகுதியில் ஒரு உயரமான குன்றின் மீது சீனிவாசப் பெருமாள் கோயில் கொண்டுள்ளார்.

கோயிலின் அடிவாரத்தில் கோனேரி என்ற அழகான குளம் காணப்படுகிறது. இங்குள்ள விநாயகர் (கற்சிற்பம்) 12 அடி உயரமும் 8 அடி அகலமும் கொண்டவர். உலகிலேயே மிகப் பெரிய பிள்ளையார் சிலை இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

சாத்தூர்

சாத்தூர் வரலாற்றுப் புகழ் பெற்ற ஊராகும். இங்கு புத்தரின் கல் உருவமும் நாணயங்களும் எடுக்கப்பட்டுள்ளன. முகலாயப் பேரரசன் ஷாஜகான் கட்டிய மசூதி கருப்பசாமி கோயில் அருகே காணப்படுகிறது. அவர் கட்டிய சத்திரமும் சாத்தூரில் உண்டு. சத்திரத்திற்கு முற்றூட்டாக அம்மன்னன் வழங்கியதே அருகில் உள்ள சத்திரப்பட்டி ஆகும். ஷாஜகான் படைகள் தங்கிய இடம் செவ்வாய் மடமாகும். அவன் முந்நூறு இசுலாமிய குடும்பங்களைக் குடியமர்த்தினான்.

சாத்தூரின் அருகே வைப்பாற்றில், ஆற்றின் நடுவே அமைந்துள்ள அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன் திருகோயில் இந்துக்களின் பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலமாகும்.

விருதுநகர் - காமராசர் நினைவகம்

விருதுநகரில் காமராசர் பிறந்து, வளர்ந்த வீட்டை அவரது நினைவாக தமிழக அரசு தத்தெடுத்து, அவரது இல்லத்தை நினைவு இல்லமாக அமைத்து, அவரது வாழ்க்கை வரலாறு அடங்கிய அருங்காட்சியகம் ஒன்றை அமைந்துள்ளது. இது விருதுநகர், நகரின் நடுவில் அமைந்துள்ளது. மேலும் இங்கு பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோயிலும் உள்ளது.

இவ்வாறாக, விருதுநகர் மாவட்ட அருங்காட்சியகம் பொது மக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் ஆசிரியர் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கும் தன்னகத்தே கொண்டுள்ள அரும்பொருட்கள், பயிற்சி அளித்தல், சொற்பொழிவு நிகழ்த்துதல், தகவல்கள் அளித்தல்

மூலம் அரும்பணிகளை ஆற்றி தொண்டாற்ற உள்ளதென்றால் அது மிகையாகாது.

துணை நூல்கள்

1. தமிழக ஊர்களின் பெயர்க் காரணங்களும், சிறப்புகளும்—பாகம் II—லேனா தமிழ்வாணன்.
2. மனோரமா ஈயர்புக் – 2001.
3. பாரதப் பெருந்தலைவர் காமராசர் – பி.சி. கணேசன்.
4. விடுதலைக்கு வித்திட்ட வீரத்தலைவர்கள் – இராம்குமார்.
5. தமிழ்நாடு சுற்றுலா – தேவகோட்டை பி. நாராயணன்.
6. சுரா ஈயர்புக் – 2001.

பன்னாட்டுப் பயணிகளுக்கு அருங்காட்சியகத்தின் தொண்டு

ந. சுந்தரராஜன்,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், கடலூர்–607 001.

முன்னுரை :

24 மணி நேரத்திற்கும் மேலாக தொழில் நோக்கமின்றி பயணம் மேற்கொள்பவர்களை சுற்றுலாப் பயணிகள் என உலக சுற்றுலா நிறுவனம் அறிவித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளை உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் என இருவகைப்படுத்தலாம். நமது நாட்டில் சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலும் சமயம் சார்ந்த இடங்களையே சென்று பார்க்கின்றனர். 1. சபரிமலை யாத்திரை ஆண்டு தோறும் மார்கழி மாதத்தில் (டிசம்பர் – ஜனவரி) பெருவாரியாக மேற்கொள்ளப்படுகிறது.

சமயம் சாராத பயணங்கள் என்பவை பெரும்பாலும் பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகங்களின் மாணவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தியாவிற்கு இத்தாலி, இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இம்மேலை நாட்டுப் பயணிகளும் பல்வேறு நோக்கங்களுக்காக இந்தியாவிற்கு வருகின்றனர். அவர்களைக் கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. புனிதப் பயணிகள் :

ஜப்பான் நாட்டவர்களில் பெரும்பகுதியினர் பௌத்த சமயம் தொடர்பான தலங்களை வழிபடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

2. பண்பாட்டுச் சின்னங்களைக் காணவரும் பயணிகள் :

ஒரு நாட்டின் கலை, பண்பாடு, வரலாறு போன்றவற்றை அறிதல் பொருட்டு வரலாறு தொடர்பான இடங்கள், நினைவுச் சின்னங்கள், பராம்பரியம் மிக்க கட்டிடங்கள் போன்றவற்றைக் காணவருகின்றனர்.

3. இயற்கை விரும்பிகள் :

ஒரு நாட்டின் மலைவளம், கடற்கரைகள், கோடைவாசஸ் தலங்கள், அருவிகள், பாலைவனங்கள், காடுகள் போன்றவற்றைக் காணவிரும்பி பயணம் மேற்கொள்கின்றார்கள்.

4. ஆய்வு மேற்கொள்பவர்கள் :

இயற்கை, அறிவியல், வரலாறு போன்ற துறைகளில் ஆய்வு மேற்கொள்பவர்கள் நாட்டின் பல பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்கின்றனர்.

அருங்காட்சியகத்திற்குத் தொடர்புடைய சுற்றுலாப் பயணிகள் :

சுற்றுலா பயணிகளில் குறிப்பாக பண்பாட்டுச் சுற்றுலாப் பயணிகள், கல்வி ஆய்வுகளுக்காக பயணம் மேற்கொள்பவர்கள், இயற்கை விரும்பிகள் ஆகிய வகையினர் அருங்காட்சியகங்களைக் காண்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

அருங்காட்சியகத்தின் தொண்டு :

அருங்காட்சியகத்தில் ஒரே கூரையின் கீழ் தங்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் சுற்றுலாப் பயணிகள் பெற்றுக் கொள்கின்றனர். இதனால் அவர்களின் 'காலம்' பெருமளவு மிச்சப்படுகிறது. இதுவே அருங்காட்சியகம் சுற்றுலாப் பயணிகளுக்கு செய்யும் தொண்டுகளில் தலையானதாகும்.

சென்னை அருங்காட்சியகமும் சுற்றுலாப் பயணிகளும்

சிற்பக்கலை :

சிற்பக்கலை தமிழகத்தின் பல்வேறு இடங்களில் விரவி இருக்கிறது. குறுகிய கால அவகாசத்தில் பயணம் மேற்கொள்ளும் அயல் நாட்டுப் பயணிகள் இவ்வனைத்து இடங்களையும் காணுவதற்கு அதிகக் காலம் தேவைப்படும்.

1. பல்லவர் சிற்பக்கலையைக் காண விரும்புபவர்கள் காஞ்சிபுரம், மாமல்லபுரம் போன்ற தமிழகத்தின் வடமாவட்ட பகுதிகளுக்குச் செல்ல வேண்டும்.
2. முற்காலச் சோழர்கள் சிற்பக்கலையைக் காண புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டும்.
3. பிற்காலச் சோழர்கள் சிற்பக்கலையைக் கொண்ட கோயில்களைக் காண நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டும்.
4. நாயக்கர் காலச் சிற்பங்களைக் காண மதுரை செல்ல வேண்டும்.

மேற்கண்ட அனைத்தையும் காண பன்னாட்கள் செலவு செய்ய வேண்டும். சிற்பக்கலை உள்ள இடங்கள் வழிபாட்டிடங்களாக இருப்பின் இடர்பாடுகள் மிகும். இங்குள்ள சிற்பங்களை அருகில் காண்பது இயலாது. மேலும் வழிபாட்டிடங்களில் இது தொடர்பான தகவல் பெறுவது கடினம்.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் இவ்வகைச் சிற்பத்தொகுதிகள் கால வரிசைப்படி (Chronological order) காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக ஒவ்வொரு காலத்திற்கும் இடையே ஏற்பட்ட மாற்றங்கள், வளர்ச்சிகள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. மேலும் சிற்பக்கலை தொடர்பான வெளியீடுகள்

வாங்கிப் பயனுறலாம். சிற்பக்கலை விரும்பும் சுற்றுலாப் பயணிகள் அருங்காட்சியகத்தால் இவ்வகையில் பயன் பெறுகின்றனர்.

விலங்கியல் :

விலங்குகளைப் பார்த்து இரசிப்பதில் அனைவரும் ஆர்வம் கொண்டவர்கள் என்பதில் ஐயம் இல்லை. உயிரியல் பூங்காக்களில் விலங்குகளைக் காணலாம். அவை கூண்டுகளில் அடைக்கப் பட்டிருக்குமேயன்றி வனச் சூழலுடன் இருக்காது. பறவைகள் சரணாலயம் சென்று காண்பதும் எப்போதும் இயலாது. சில குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே பறவைகள் வந்துபோகும்.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் விலங்குகள் பதப் பதப்படுத்தப்பட்டு அவைகளின் இயற்கைச் சூழலுடன் உள்ள காட்சிப் பெட்டிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன (Diorama Show Case). மேலும் விலங்குகள் உயரம், எடை, உணவுப் பழக்க வழக்கங்கள் போன்ற விவரங்கள் விளக்க அட்டைகளில் தரப்பட்டு உள்ளன. இத்தகையக் காட்சிப் பெட்டிகள் விலங்கியல் ஆர்வலர்களுக்குப் பெரும்பயன் அளிக்கின்றன.

பறவைகளின் கூடுகள், முட்டைகள் போன்றவைகளும் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. விலங்கியல் பூங்காக்களில் பறவைகளின் கூடுகள், முட்டைகளைச் சென்று பார்ப்பது கடினம்.

புதியதாக உதயமான நாகப்பட்டினம் அரசு அருங்காட்சியகத்தில் பறவைகள் வலசைப் போவது குறித்த காட்சிபெட்டி உள்ளது. இதில் விசையை அழுத்தினால் பறவை செல்லும் பாதையில் விளக்குகள் தொடராக எரியும். இதனால் பறவைகள் எந்த நாட்டிலிருந்து எந்த நாடுகளுக்குச் செல்கின்றன என்பதை அறியலாம்.

மலைமாந்தர்களான பழங்குடி மக்களின் பண்பாட்டுப் பொருட்களான ஆடைகள், அணிகலன்கள், வசிப்பிடங்களின்

மாதிரிகள் மானிடவியல் பிரிவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மலைவாழ் மக்களின் இருப்பிடம் செல்வது இடர் மிகுந்தது. அவ்வாறு சென்றாலும் அவற்றை ஒரு சேரக்காண்பது கடினமானது.

அருங்காட்சியகம் காணற்கரியவைகளைத் தொகுத்து, அழகுற காட்சிக்கு வைத்து, பன்னாட்டுப் பயணிகளுக்குத் தொண்டாற்றுகிறது.

அருங்காட்சியகமும் சுற்றுலாவும்

தமிழ் நாடு அரசு சுற்றுலாத் துறையினர் நடத்தும் சென்னை நகர் உலாவில் அருங்காட்சியகமும் சேர்க்கப்பட்டுள்ளது. மைய மாநில அரசுகள் வெளியிடும் கையேடுகளில் அருங்காட்சியகம் பற்றிய செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு அரசு சுற்றுலாத் துறை 1990ல் வெளியிட்ட புதுக்கோட்டை பற்றிய கையேட்டில் “புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகம் அமைந்துள்ள இடம் மற்றும் புவியியல், விலங்கியல், மானிடவியல் தொடர்பான பொருட்கள் கல்வெட்டுகள், சிற்பங்கள் படிமங்கள் அழகுற காட்சிப்படுத்தப் பட்டுள்ளன” என்ற தகவலைத் தருகிறது.

இந்திய அரசு சுற்றுலாத் துறையினர் வெளியிட்டுள்ள பெங்களூர் குறித்ததான கையேட்டில் (What to see ?) காணத்தக்கவை யாவை? என்ற தலைப்பின்கீழ் கப்பன் பூங்காவிற்கு அருகில் உள்ள அரசு அருங்காட்சியகமும், வெங்கடப்பா கலைக் கூடமும் இடம் பெற்றுள்ளன. சிற்பங்கள், நாணயங்கள், கல்வெட்டுகள், இயற்கை அறிவியல் பொருட்கள் தவிர மைசூர் அரசர்களின் அரசவை ஓவியரான வெங்கடப்பா என்பவரின் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன என்ற தகவலை இரத்தினச் சுருக்கமாக அளிக்கிறது. இதேபோல் விஸ்வேஸ்வரய்யா தொழில் நுட்ப அருங்காட்சியகம் பற்றி குறிப்புகளும் உள்ளன.

சென்னை, புதுடெல்லி, மும்பை, கோல்கத்தா போன்ற பெருநகரங்கள் பற்றி சுற்றுலாத் துறையினர் வெளியிடும் கையேட்டில்

அருங்காட்சியகங்கள் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அருங்காட்சியகம் வாயிலாக அளப்பரிய தகவல்களைப் பெறுகின்றனர். ஒரு சிறிய வளாகத்தில் அப்பகுதியின் அனைத்து விதமான கலை, பண்பாடு, அறிவியல் தொடர்பான கலைப் பொருட்களைத் திரட்டி, அவற்றை ஒருசேர சுற்றுலாப் பயணிகளுக்கு தரும் மாபெரும் தொண்டு நிறுவனமாக அருங்காட்சியகம் திகழ்கிறது.

துணை நூல்கள்

1. G.J. Jayadev, Guide to the Anthropological Exhibits, Reprinted by the Commissioner of Museums, Reprinted 1994.
2. S. Thomas Satyamurthi, Bird's Eggs and Nests in the Collection of Madras Government Museum, Government of Tamil Nadu, 1979.
3. Bangalore Travel Service Directory, Department of Tourism, Government of India, March 1990.
4. Pudukkottai (Treasure-trove of Archaeology) Department of Tourism, Government of Tamil Nadu, February 1970.
5. Ratandeep Sing, Infrastructure of Tourism in India, Kanishka Publishers, New Delhi, 1996.

SESSION II

ART AND CULTURAL HERITAGE AND REGISTRATION OF OBJECTS AND BUILDINGS

PORTRAIT SCULPTURES IN VIRUDHU NAGAR DISTRICT

K. LAKSHMINARAYANAN,
Curator for Education, Government, Museum, Chennai-8.

Present Virudhunagar District is a part of old Ramanathapuram District. During 16th and the first quarter of 17th Centuries it was under the rule of Madurai Nayak Kings. The emergence of Madurai Nayak Kingdom is a sequence of the spread of Vijayanagar influence in Tamil land during the 16th Centuary A.D. As such it inherited the norms and mores of Pan-South Indian Culture evolved by the last great Hindu Empire of Vijayanagar. Madurai Nayaks stamped their mark in the development of Tamil Art and Architecture. Actually it was the Nayak Kings who rebuilt the Madurai city after its devastation by the Muslim invaders from the North, in 14th Centuary A.D. Among the Nayak kings of Madurai, Thirumalai Nayak shines like a star, not for his military adventures but for his cultural activities, statesmanship and architectural achievements. His Madurai Nayak Mahal stands even to-day as an evidence for his love in raising beautiful edifices. Thirumalai Nayak repaired and renovated many old temples with new additions.

The two temples which got his care in Virudhunagar District are the famous Thiruvilliputtur Andal Temple and the Saivaite Vaidiyanatha Swamy Temple in Madavarvalagarm, a near by village of Thiruvilliputtur. Both these temples have portrait sculptures of Thirumalai Nayak and his family members.

In the Andal Thirukkoil the portrait sculpures are carved in a small raised mandapam in front of the sanctum of Andal Shrine. In one of the front pillars of the Mandapa, Thirumalai Nayak and his two queens are depicted in worshipiping pose with folded hands. In another pillar just opposite to this pillar are shown another royal person and his two consorts in similar worshiping pose. Since these sculpures are covered with brass sheets we could not see the intricate carvings of these sculpures. So we may take these sculpures, more as effigies than of the portrait scúlpture. But we have real formalized portrait sculptures in the Madavarvalagam Temple Mandapa.

In Madavarvalakam Temple Mandapa Thirumalai Nayak and his family members are depicted as pillar sculptures. Here the scuptures are life-size. These portrait sculptures in the Madavarvalagam in the frcnt Mandapa are very imposing. These sculptures belong to the category of both column sculptures and portrait sculptures. Column sculptures in Hundred or Thousand Pillared Mandapa is an important feature of Nayak School of Art. A large number of saints and ascetics find expression in the sclputural art of this sphere. Donar figures now become very prominent column sculptures as we see here. Attempts were successfully made during this period to liberate the carvings from their support and present the sculptures almost in round with a few link portions with the support. The dominating figure of Thirumalai Nayak had been designed with robust limbs and protruding stomach, a typiycal Nayak manner. He is accompained by his two queens fully decorated with ornaments and garments. The status of his consorts has been revealed in the difference in the size of their figures. In the pillar in opposite to this Thirumalai Nayak family sculptures are depicted another set of portrait sculptures. The persons depicted here seem younger and slender than the aged figures of Thirumalai Nayak and his consorts. Local and Temple traditions identified this sculpture group as that of Thirumalai Nayak's brother and their consorts. The identification of this figure pose some problems. While there is no difficulty to confirm the portrait sculptures of Thirumalai Nayak and his consorts we have to face much problem in determining the other sculptures' group.

The History of Karnatkaka Governors and Meckenzie Manuscripts informs that Thirumalai's father, Muthukrishnappa had three sons. They are (i) Muthu Veerappa (ii) Thirumalai and (iii) Kumaramuthu. The Puliyur Plate of Venkata II informs only the two sons of Muthu Krishnappa. They are (i) Muthuveerappa and (ii) Thirumala. The plate referance Kumaramuthu Thirumala as the son of Thirumalai Nayak. But as we see the histroy of Madurai Nayaks he did not succeed Thirumalai Nayak as the king of Madurai after the later's demise. Only Muthuveerappa Nayak II became Madurai King after Thirumalai Nayak in 1659. We may surmise Kumaramuthu Thirumala as a son of Thirumalai Nayak by one of his favourite consorts who did not have a status of a queen. As per Satyanatha Ayyar's remarks, Kumaramuthu Thirumala calmly retired and settled in the domine near Sivakasi after the throne of Madurai had been given to Muthuveerappa Nayak II. Sivakasi in that time was the seat of Madurai Nayak's governor. Thiruvilliputtur and Madavarvalagam are in the near proximity of Sivakasi. On considering these points we may identify the portrait sculpture as that of Kumaramuthu Thirumala and his consorts. These sculptures might have been carved during the time of Thirumalai Nayak when Kumaramuthu enjoyed very privileged position with the hope of succeeding Thirumalai Nayak.

References :

1. Sathyanatha Ayyar, R. History of the Nayaks of Madurai, Reprinted, 1980.

2. Aravamuthan T.G. , Portrat Sculptures in South India.

A SURVEY OF GLOBAL LEGISLATIVE MEASURES ON ART, CULTURAL AND NATURAL HERITAGE

DR. V. JEYARAJ,

Curator,
Chemical Conservation and Research Laboratory,
Government Museum,
Chennai-600 008.

Introduction

Cultural properties are facing a lot of problems in all the countries. In order to arrest the illicit traffic, theft and vandalism of cultural properties different countries have enacted laws. Legislation began to be enacted from the beginning of the 19th century.

All most all countries have some law or the other for the protection of monuments, archaeological remains, palaeontological sites and antiquities.

Legislative Measures-Global Context:

Every country is vigilant in safeguarding its cultural and natural heritage. Depending upon the need, various countries have enacted laws and Acts to protect the heritage. The earliest law regarding the protection of cultural property was one, which controlled the transfer of Sate archives in 1809 in France. In India the Indian Museum Act was enacted in 1814. The Indian Treasure-trove Act 1878 was enacted to protect the treasure-trove finds in Indian context. Since this Act was enacted in the undivided India this Act is being followed in Pakistan. The Degree of 7th March 1886 came into existence in Tunisia regarding the ownership and conservation of antiquities and art objects. The Treasure-trove ordinance of 1888 of Sri Lanka was enacted in 1888. Clause-73 forbids export of antiquities. Even the diplomatic baggages are checked. The Law of 1889 controlling the transfer of cultural property came into existence in France. By the law of 1897, cultural property recovered by excavations became the property of the State in Greece. The Egyptian Law of 1897 was enacted protecting the cultural objects recovered by excavations. As per the Iraq's Antiquity laws replica's of antiquities cannot be made. Barring a few countries, export regulations exist almost every where. Singapore and Kong Kong are international markets where all kinds of curios and an, archaeological and ethnological objects are available. There is no restriction except the local customs duty. In almost all countries there are prohibitory orders for the export of cultural objects.

ICOM compiled all the laws regarding the protection of cultural property and was published in the name of Handbook on Natural Legislation-Burnham, 1974. Convention for Protection of Cultural Property in the Event of Armed Conflict (1953). Recommendation of International Principles Applicable to Archaeological Excavations (1956). Recommendation on the Most Effective Means of Rendering Museums to Everyone (1960). Recommendation on the Means of Prohibiting and Preventing the Illicit Import, Export and Transfer of Ownership of Cultural Property (1964). Convention on the Means of Prohibiting and Preventing the Illicit Import, Export and Transfer of Ownership of Cultural Property (1970). Convention Concerning Protection of the World Cultural and Natural Heritage (1972). Recommendation concerning the International Exchange of Cultural Property (1976). Recommendation on Participation by the people at large in cultural life and their contribution to it (1976). Recommendation concerning the safeguarding and contemporary role of historic areas (1978). Recommendation for the Protection of Movable Cultural Property (1979).

Among the UNESCO's many conventions and recommendations the following are those concerned with prohibiting and preventing the Illicit Export, Import and Transfer of Ownership of Cultural Property (1970), the Protection of both the World and National Cultural and Natural Heritage (1972), the

International Exchange of Cultural Property (1976) and the Protection of Movable Cultural Property (1978). It has also been actively promoting the nature of cultural property to its country or origin, particularly material, which might have been removed during colonial occupation or through commercial exploitation.

Indian Laws Regarding Antiquities

India possesses thousands of monuments, which are worth preserving. The British rulers thought about their preservation. Many made a very good study on them and recorded. But up to the 18th century there was no legislation made to preserve them. There was a beginning in the legislation regarding the preservation of structural vestiges of the past. The earliest attempt in this area was the passing of the Bengal Regulations XIX of 1810. In 1817 the Madras Regulations came into existence. These empowered the Government to intervene wherever private individuals faced a public building with the risks of misuse.

In 1863, when Lord Canning was the Governor General of India, the Act of 1863 was passed. According to this act, the Government was empowered to prevent injury to and preserve buildings remarkable for their antiquity or for their historical or architectural value.

In 1878, the Indian Treasure-trove Act of 1878 was enacted when Lord Lytton was the Governor General of India. In 1866, the first Indian Museum Act, transferring the management of the museum from the Asiatic Society to the newly formed Board of Trustees was enacted. In 1910 amendments were made to the Act. Subsequently in 1960 amendments were made to the Indian Museum Act and the new Board of Trustees was headed by the Governor of West Bengal as its Ex-Officio Chairman. It was directed to fight against treasure-hunting besides regulating the lawful disposal of treasures found in accidental digging.

In 1904, during the reign of Lord Curzon as Governor General of India, the Ancient Monuments Preservation Act 1904 was enacted by the Government of Bengal. It was to provide for the preservation of ancient monuments, for the exercise of control over traffic in antiquities and over excavation in certain places and for the protection and acquisition in certain cases of ancient monuments and of objects of archaeological, historical or artistic interest.

In 1921, in the Devolution Rules of 1921, archaeology was classified as a Central subject. According to this, all the protected monuments under the Ancient Monuments Preservation Act, 1904 were brought under the control of the centre leaving the unprotected monuments under the protection of the Government of Provinces.

In 1932, when Earl Willington was the Viceroy of India amendments to the specific provisions of the Act 1904 came into effect. These amendments allowed the issue of license to outside, including foreign agencies for the excavation of protected areas and to regulate operations like mining, quarrying, blasting, and excavation at or near protected monuments.

In 1935, the Government of India Act 1935 made archaeology as a federal subject. As per this Act all powers related to the ancient and historical monuments, including archaeological sites and remains previously vested to the Provincial Governments were taken over by the Government of India.

In 1947, when Mortimer Wheeler was the Director General of Archaeology, the Antiquities (Export Control) Act 1947 was passed by the Indian Government. Under this Act, no antiquity can be exported without a license issued by the Director General. In terms of this Act, antiquity includes any object which is over 100 years old and the Antiquities (Export Control) Act 1947 includes provision for giving certificates as to whether an object is an antiquity or not an antiquity.

In 1950, when the constitution of India was promulgated, the responsibilities between the Centre and States as far as archaeology was concerned were given a good shape.

According to this, under Union list, ancient and historical monuments and records, and archaeological sites and remains declared by or under law by Parliament to be of national importance got place. Under the State list, libraries and other similar institutions controlled or financed by the States; ancient and historical monuments and records other than those declared by or under law made by Parliament to be of national importance sound place. Under the concurrent list, archaeological sites and remains other than those declared by or under law made by parliament to be of national importance found place.

In 1951, in order to fulfil the provisions of the constitution, the Ancient and Historical Monuments and Archaeological Sites and Remains (Declaration of National Importance) Act, 1951 was enacted in November 28th, 1951. Under this all archaeological sites and remains declared under the Ancient Monuments Preservation Act, 1904 were re-declared as monuments and archaeological sites of national importance.

In 1958, with a view to bringing the Ancient Monuments Preservation Act 1904 into lines with the constitutional provisions and also to conform it with the new developments in the changed situation, Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 1958 was enacted on August 28th, 1958.

In 1961, through an Act of the Parliament, the Salar Jung Museum along with its library was declared as a Museum of National Importance.

The Arms Act, 1959 (54 of 1959) was enacted by the Parliament in 1960 and it came into force on the first of Oct. 1962 by a special notification issued by the Ministry of Home Affairs on the 13th July, 1962. It extends to the whole of India.

This Arms Act regulates the acquisition, possession, manufacture, sale, import, export and transport of all kinds of arms in India. According to the Section 2 of this Act, the arms means articles of any description designed or adapted as weapons for offence or defense. It also includes, fire arms, sharp edged and other deadly weapons, and parts of, and machinery for manufacturing arms. But does not include articles designed solely for domestic or agricultural uses such as a lathi or ordinary walking stick and weapons incapable of being used otherwise than as toys or of being converted into serviceable weapons.

Section 3 of the Act clearly specifies that no person (or institution) can acquire, have in his possession or carry any arms or ammunition unless he holds in this behalf a license issued in accordance with the provisions of the Act. The Arms Rules, 1962 were made there under.

